**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி மாதம் 26 -ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை

CNR:NO.TNNGO3-000323-2025

**வணிக அசல் வழக்கு எண்.20/2026**

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, நாகப்பட்டினம்

அதற்காக அதன் கிளைமேலாளர் .....................வாதி

-எதிர்-

தளபதி பிராய்லர்ஸ் அதற்காக அதன் உரிமையாளர்

சுதாகர், த/பெ. பால்ராஜ் .....................பிரதிவாதி

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.07.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. பாலா செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.............

**தீர்ப்புரை**

தாவா தொகை ரூ.3,39,145/-ம், அதற்கு ஆண்டிற்கு 14.00% பின்வட்டியுடன் சேர்த்து பிரதிவாதி செலுத்தி வைக்க உத்தரவிட வேண்டு மெனக் கோரியும், வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டும் என கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:21:01 +0530

செய்யப்பட்டுள்ளது.

## I. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்

பாரத மாநில வங்கியானது பாரத மாநில வங்கியின் சட்டம் 23/1955 ன் படி அமைக்கப்பட்ட வங்கி என்றும், வாதி வங்கிக்காக வழக்கு தாக்கல் செய்யவும், எதிர்வழக்காடவும், கையெழுத்திடவும், உறுதிமொழி செய்யவும் மேற்படி சட்டத்தின் ரெகுலேஷன் 76 மற்றும் 77 ன்படியும், உரிமையியல் நடைமுறை சட்டம் அதிகாரம் 29 ன் படியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி வாதி வங்கியில் முத்ரா கடன் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தன் பேரில், பிரதிவாதிக்குகடன் வழங்க அனுமதியளிக்கப்பட்டது என்றும், அதனடிப்படையில் பிரதிவாதி வாதி வங்கியில் கடந்த 23.01.2020 அன்று ரூ.2,00,000/- கடன் பெற்றுக்கொண்டு. அந்த கடனுக்கு பிரதிவாதி கொதுவை ஒப்பந்தமும், ஏற்பாட்டு கடிதம், கடன் வழங்குதல், அனுமதி உறுதிபடுத்தல் கடிதம் போன்ற அனைத்து ஆவணங்களையும் 28.01.2020 ல் எழுதிக்கொடுத்தார் என்றும், பிரதிவாதி மேற்படி கடனுக்கு 14.00% வட்டியுடன் செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி கடனை பிரதிவாதி காலத்தில் செலுத்த தவறிவிட்டார் என்றும், வாதி வங்கிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டிய தாவா கடனுக்காக கடந்த 11.01.2023 தேதியில் உயிர்ப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பலமுறை திரும்ப கேட்டபோது பிரதிவாதி மேற்படி கடன் கணக்கை முடிக்கவில்லை என்றும், வாதி வங்கி கணக்கு நகலின்படி கடன் நிலுவை ரூ.3,39,145/- தொகை செலுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட தொகைக்கு 12.40% பின்வட்டியுடன் பிரதிவாதி செலுத்த ஒரு தீர்ப்பும், தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டு வழக்கு வாதி வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

II. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு உரிய

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:21:09 +0530

முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பியதை பெற்றுக்கொண்ட பிரதிவாதி நீதிமன்றம் ஆஜராகாததால் 26.11.2025 அன்று தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

III. **இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

IV. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

V. **பிரச்சனைக்கான தீர்வு**

1) வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நிரூபிக்கும் விதமாக வாதியின் வங்கியில் பணி புரியும் வங்கி மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 நீதிமன்றத்தில் அளித்துள்ள முதல் விசாரணையில் வழக்குரையில் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பு சாட்சியத்திற்கு ஆதரவாக 23.01.2020 தேதியிட்ட கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆவணமாகவும், 28.01.2020 தேதியிட்ட பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் வழங்குதல், அனுமதி உறுதிப்படுத்தல் கடிதம் வா.சா.ஆ.2 ஆவணமாகவும், 28.01.2020 தேதியிட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் பொதுவை ஒப்பந்தம் வா.சா.ஆ.3 ஆவணமாகவும், பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த ஏற்பாட்டு கடிதம் வா.சா.ஆ.4 ஆவணமாகவும், 11.01.2023 தேதியிட்ட உயிர்ப்புக்கடிதங்கள் வா.சா.ஆ.5 ஆவணமாகவும், 08.04.2025 தேதியிட்ட வாதி வங்கியில் பிரதிவாதியின் பெயரில் பராமரித்து வரும் வங்கி கணக்கு பட்டியல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:21:15 +0530

2) வா.சா.1-ன் சாட்சியத்தையும், வாதி தரப்பு சான்று ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1 ம் பிரதிவாதி முத்ரா கடன் கேட்டு விண்ணப்பித்து, அந்த விண்ணப்பம் வாதியின் வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டு, கடந்த 28.01.2020 அன்று ரூ.2,00,000/- கடன் வாங்கியுள்ளார் என்பதும், மேற்படி கடனுக்காக வாதி வங்கிக்கு அனைத்து ஆவணங்களும் பிரதிவாதியால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கடன் தொகை 12.40% பின்வட்டியுடன் செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பதும், பிரதிவாதி 08.04.2025 வரை வாதி வங்கிக்கு திரும்ப செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.3,39,145/- உள்ளது என்பதும், எனவே, பிரதிவாதி வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல் இருந்து வந்துள்ளார் என்பதும் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதி வங்கி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

3) வாதி தரப்பு வழக்கை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும், சான்றாவணமும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டுள்ளார். ஆனால், வாதி தரப்பில் இந்த வழக்கை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், வாதி வழக்கில் கோரியுள்ள தொகை ரூ.3,39,145/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் இத்தீர்ப்புரை பிறப்பிக்கப்படும் வரை 12% வட்டியும், இத்தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து தாவா தொகை முழுவதும் செலுத்தி முடிக்கும் காலம் வரை 6% பின்வட்டியையும், வழக்கு செலவுத் தொகையையும் பிரதிவாதிகளிடமிருந்து பெற வாதி உரிமையுடையவர் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:21:22 +0530

**V. முடிவாக,**

1. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **வாதி வழக்கில் கோரியுள்ள தாவாதொகை ரூ.3,39,145/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் இத்தீர்ப்புரை பிறப்பிக்கப்படும் வரை வருடத்திற்கு 12% வட்டியும், இத்தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து தாவா தொகை முழுவதும் செலுத்தி முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு 6% பின்வட்டியையும், வழக்கு செலவுத் தொகையையும் பிரதிவாதிகளிடமிருந்து பெற வாதி உரிமையுடையவர் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பதிவெடுத்து பிழைநீக்கம் செய்து இன்று 10.07.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:21:30 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 திரு. ரஞ்சித் (வாதி வங்கி மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.01.2020 | கடன் விண்ணப்பம் | (அசல்) |
| வா.சா.ஆ.2 | 28.01.2020 | கடன் வழங்குதல் மற்றும் உறுதிப்படுத்துதல் கடிதம் | (அசல்) |
| வா.சா.ஆ.3 | 28.01.2020 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடன் மற்றும் கொதுவை | (அசல்) |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தம் | |
| வா.சா.ஆ.4 | 28.01.2020 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடன் ஏற்பாட்டு கடிதம் | (அசல்) |
| வா.சா.ஆ.5 | 11.01.2023 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உயிர்ப்புக்கடிதம் | (அசல்) |
| வா.சா.ஆ.6 | 08.04.2025 | வாதி வங்கியில் பிரதிவாதியின் பெயரில் பராமரித்து வரப்படும் வங்கி கணக்கு | (சான்றிட்ட நகல்) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி</u>** : இல்லை.

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.10 15:21:37 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **தீர்ப்புரை**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**வணிக அசல் வழக்கு எண்.20/2026**

நாள் : 10.07.2026